10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 39 புதன்கிழமை ஜூன் 14 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## பொட்டம்மான் உயிரிழப்பு

### பாடசாலைக்கு விடுமுறை

வடமராட்சி வதிரி புளியடிச்சந்தியில் மூன்று சில்லு சைக்கிளின் கைபிடிக்குள் சிக்கியதால் 'பொட்டம்மான்' உயிரிழந்தார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த பொட்டம்மான் என அப்பகுதி மக்களால் அழைக்கப்படும் பரராஜசிங்கம் பால சுப்பிரமணியம் (வயது-60) என்பவர் உடல் இயலாமை காரணமாக மூன்று சக்கர சைக்கிளிலேயே போக்குவரத்து செய்துவந்தார். நேற்றைய தினம் அவர் இவ்வாறு அந்தச் சைக்கிளில் பயணிக்கும்போது, சைக்கிளை திருப்ப முயன்றுள்ளார். எனினும் எதிர்பாராத விதமாக அவரது தலை சைக்கிள் கைபிடிக்குள் சிக்கிக்கொண்டது. இதனால் மூச்செடுக்க முடியாமல் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இவரின் பேரனாரே வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கான காணியை வழங்கியவர் என்பதால், பொட்டம்மானின் மறைவையொட்டி அந்தப் பாடசாலைக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-11)


## விஷக் காகிதத்தில் தரம் 7 பாடப்புத்தகம்

மருத்துவர்கள் அதிர்ச்சி தகவல்



பாடசாலைகளில் ஏழாம் தர மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள புவியியல் புத்தகங்கள் விஷ இரசாயன காகிதத்தால் அச்சிடப்பட்டுள்ளன என்ற அதிர்ச்சித் தகவலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கெ வெளியிட்டுள்ளார்.

“தற்போது பாடசாலைகளில் தரம் ஏழு மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள 06



## வடக்கு முதலமைச்சர் இனவாதி

”வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் போன்றவர்களே யாழ்ப்பாணத்தில் இனவாதத்தைப் பரப்பி வருகின்றனர். அங்குதான் இனவாதிகள் உள்ளனர். எனவே யாழ்ப்பாணம் சென்றால் இனவாதிகளைப் பிடித்துவிடலாம் ”என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# வடக்கு அமைச்சர்கள் நால்வரும் ‘அவுட்’!

★ ஐங்கரநேசன், குருகுலராஜா நாளை பதவி விலகல்

★ டெனிஸ்வரன், சத்தியலிங்கத்துக்கு கட்டாய விடுமுறை புதிய விசாரணையின் பின் அவர்களும் வெளியேற்றம்




வடமாகாண சபையின் அமைச்சர்கள் நால்வரும் பதவி விலகுமாறு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் இன்று வடமாகாண சபையில் அறிவித்துள்ளார்.

ஊழல், அதிகார துஷ்பிரயோக விசாரணைக் குற்றச்சாட்டுக்குள்ளான அமைச்சர்களின் நிலை பற்றி இன்று வடமாகாண சபையில் விவாதிக்கப்பட்டது. அதன்போதே இந்த அதிரடி அறிவிப்பினை முதலமைச்சர் வெளியிட்டார்.

இந்த நான்கு அமைச்சர்களில் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், த.குருகுலராஜா ஆகிய இருவரும் நாளை நண்பகலுக்கு முன்னர் தாமாகப் பதவி விலக வேண்டும் என்று முதலமைச்சர் கோரியுள்ளார். அத்துடன் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன், சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் மீது உடனடியாக புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால், அவர்கள் இருவரும் ஒரு மாத விடுமுறைக் கடிதத்தை நாளை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார். விடுமுறையில் இருக்கும் போது குறித்த இரு அமைச்சர்களோ அல்லது அவர்களின் பிரத்தியேக 06




## ஐங்கரநேசன் மறுப்பு

தன் மீதான சகல குற்றச்சாட்டுகளையும் அமைச்சர் ஐங்கரநேசன் மறுத்துள்ளார்.

“முதலமைச்சர் இடும் உத்தரவு எதுவோ அதனை நான் சிரந்தாழ்த்தி ஏற்றுக்கொள்வேன். ஆனால், பொய்யான, நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளுடன் சென்றால் அதனால் ஏற்படும் அவப்பெயர் தலைமுறைகளுக்கும் நீளும். இவர்கள் திட்டமிட்டு என் ஆளுமையைப் 06

## “அமைச்சரவையே பொறுப்பு”

“என் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு வடக்கு மாகாண அமைச்சரவையே பொறுப்புக்கூற வேண்டும்.” என்று கல்வி அமைச்சர் குருகுலராசா தெரிவித்துள்ளார்.

“எனது அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் யாவும் அமைச்சரவையின் முடிவுக்கு இணங்கவே செயற்படுத்தப்பட்டன. என்மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் யாவும் 06

## எதிர்க்கட்சி வெளிநடப்பு

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வடக்கு மாகாணசபையில் இன்றைதினம் சிறப்பு விவாதம் நடைபெற்றது. அதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர். சபையில் அமைச்சர் ஐங்கரநேசன் தன்னிலை விளக்கமளித்திருந்தார். 06

## முதலமைச்சர் மீதும் குற்றச்சாட்டு

“வடக்கு மாகாண முதலமைச்சரது அமைச்சு மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. ஆயினும், இது தொடர்பில் விவாதிக்க எமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை” என்று மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-01)

## பிரிட்டனில் தீ விபத்து

### இலங்கையருக்கு பாதிப்பில்லை

பிரிட்டனில் 27 மாடிக் கட்டடம் ஒன்றில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இன்னமும் அணைக்கப் படாமல் தீ எரிந்து கொண்டேயிருப்பதால் சேத விபரங்களை இதுவரை சரிவரப் பெறமுடியாதுள்ளது. ஆயினும் இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், தீ விபத்துக் குள்ளான கட்டடத்தில், இலங்கையர்கள் எவரும் இருக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

“இந்தத் தீ விபத்தால், இலங்கையர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பான தகவல்களை, அங்குள்ள இலங்கை உயர் ஸ்தானிக 06

## “நந்தவனத்தில் ஓர் ஆண்டி”

### பசுபதிப்பிள்ளையின் பாட்டு

பாட்டுப் பாடியவாறு தமிழரசுக் கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை சபை அமர்விலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளார்.

வடக்கு மாகாணசபையில் இன்றைய அமர்வின்போது முதலமைச்சர் உரையாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சபை நடவடிக்கையிலிருந்து வெளிநடப்புச் செய்வதாகக் கூறி வெளியேறினர். அதன்போது உறுப்பினர் பசுபதிப்பிள்ளை ”நந்தவனத்தில் ஓர் ஆண்டி நாலாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டுவந்தான் ஒரு தோண்டி அதை கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி” என பாடல் பாடியவாறு சபையிலிருந்து வெளியேறினார். (எ-01)

## தமிழரசுக் கட்சியும் வெளியேறியது

அமைச்சர்களுக்கு எதிரான இன்றைய சிறப்பு விவாத்தின்போது சபையிலிருந்து ஆளுங்கட்சியான கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்துள்ளனர். இன்று காலை கூடிய அமர்வில் அமைச்சர்கள் இருவரும் தன்னிலை விளக்க உரையாற்றினர். 06



# 35 க்கு மேற்படோருக்கே ஓட்டோ லைசென்ஸ்

## அமைச்சர் அறிவிப்பு

ஓட்டோக்களால் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்கும் வகையில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே ஓட்டோ செலுத்தும் அனுமதிப் பத்திரத்தை வழங்க உத்தேசித்துள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நேற்றுத் தெரிவித்தார்.

"ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துகள், கடந்த 2 வருடங்களில் அதிகரித்துள்ளன. குறிப்பாக கொழும்பில் அதிகளவான விபத்துக்கள் ஓட்டோ மூலமே ஏற்பட்டுள்ளன. வயதில் குறைந்தவர்கள் கவனயீனமாகவும் வேகமாகவும் அதனைச் செலுத்துவதே இதற்கு காரணம். அதனாலேயே 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும் சாரதிப் பத்திரம் வழங்க முடிவு செய்துள்ளோம்" என்றார் அவர். (ஆ)

# வடமாகாண சபையில் ஊழல் இருக்கக்கூடாது!



## மஸ்தான் எம்.பி பேச்சு

பெரும் எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட வட மாகாண சபை ஊழலின்றி மக்களுக்களுக்காக செயற்பட வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இன்று பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் ஏற்பாட்டில் அவரது வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற இலவச கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இப்பொழுது வடமாகாண சபைக்குள் நடப்பது என்னவென்றே விளங்கவில்லை. வட மாகாண சபையில் ஊழல்கள் நிலவுவதால் மக்களுக்கும் யாரை மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி தோன்றியிருக்கின்றது. போருக்குப் பின்னர் வடக்கில் மீண்டும் தமிழ் மக்களின் கல்விநிலையில் வளர்ச்சி ஏற்படுவதை அவதானிக்க முடி கின்றது.

இப்படிப்பட்ட நிலையில் கல்விக்கு வலு சேர்க்க வேண்டிய மாகாண கல்வியமைச்சில் ஊழல் என்று சொல்லப்படுகிறது. எமது பகுதிக்கே உரித்தான தொழில் விவசாயம். ஆனால் இங்குள்ள விவசாய அமைச்சிலும் ஊழல் என்றால் என்ன தான் செய்வது?" என்றும் மஸ்தான் கேள்வியெழுப்பினார். (ஆ-9)

# தனியார் வேலைக்கு சிறைக் கைதிகள்

சிறைச்சாலையில் உள்ள கைதிகளை தனியார்துறை தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

சிறு குற்றங்களைச் செய்த கைதிகளுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. காலணி தயாரித்தல் உள்ளிட்ட கைத்தொழில் நிறுவனங்களின் பணிகளிலேயே இந்தக் கைதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இதனால் கைதிகளைப் பராமரிக்கும் செலவு அரசுக்கு குறைவதோடு, மேலதிக வருமானமும் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. (ஆ)

# ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர் சாவு



ஈழத்தமிழர்களின் நியாயத்தை உலக அரங்கில் ஓங்கி ஒலித்த பெல்ஜியம் நாட்டை சேர்ந்த மார்க்சீய அறிஞரும், எமிரேட்ஸ் பேராசிரியருமான 92வயதான பிரான்சுவா ஹூட்டார்ட் கியூட்டோவில் கடந்த வியாழக் கிழமை உடல் நலக்குறைவு காரணமாக காலமானார்.

2009 இல் கொத்து கொத்தாக தமிழினம் படுகொலை செய்யப்பட்டபோது உலக அரங்கில் முதன்முதலில் இலங்கை அரசு ஈழத் தமிழர்களை இனப் படுகொலை' செய்கிறது என்று சொன்னவர் இவராவார்.

2009ல் இலங்கை அரசு ஈழத்தமிழருக்கெதிராக நடத்தியது நன்கு திட்டமிடப்பட்ட ஒரு 'இனப்படுகொலையே" என்று உலக அரங்கில் முதன்முதலில் 2013 டிசம்பரில் ஏற்றுக் கொண்ட, ஜெர்மன் நாட்டில் பிரேமன் நகரில் நடந்த மக்கள் தீர்ப்பாயத்தை உருவாக்கியவர்களின் முக்கியமானவர் பேராசிரியர் பிரான்சுவா ஹூட்டார்ட் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# உறக்கத்தில் இருக்கும் உழவு இயந்திரங்கள்



கமநல சேவைத் திணைக்களங்களில் உறங்கிக் கொண்டிருக்கும் 400க்கும் அதிகமான உழவு இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலுமுள்ள கமநல சேவைத் திணைக்களங்களிலும் தற்போது 400 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை இந்திய அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்டவை. ஆயினும் இவ்வாறு பெருந்தொகையான உழவு இயந்திரங்கள் உள்ளபோதும் அவற்றினை கமநல சேவைத்திணைக்களம் பயன்படுத்தாது, உறங்கு நிலையில் வைத்துள்ளது. எனவே அவற்றினை விவசாயிகளுக்கு வழங்கி, விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுமாறு கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஆ)

# அனர்த்த மீட்புக்கு அமெரிக்க விமானம்

இலங்கையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமான உதவிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று வரவுள்ளது.

தற்போது அமெரிக்கக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையின் மரைன் படைப்பிரிவினருடன் இணைந்து, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருந்து அவர்கள் இந்தப் பணிகளில் ஈடுபடவுள்ளனர். இந்த நிலையில், பசுபிக் கட்டளைப் பீடம் இடர் உதவிப் பணிகளுக்காக இராணுவ விமானம் ஒன்றையும், நிபுணர்களையும் விரைவில் கொழும்புக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஆ)

# 25 கோடி பெறுமதியான காணிகள்

## வைத்தியசாலைக்கு அன்பளிப்பு



களுபோவில அரச போதனா மருத்துவமனைக்கென 25 கோடி ரூபா பெறுமதியான காணியினை அப்பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்று அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் காணி உறுதிகளைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி, குறித்த காணி உறுதிப் பத்திரத்தினை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கையளித்தார். திருமதி இந்திராணி த கொஸ்தா, திருமதி. கமலா த கொஸ்தா மற்றும் காலஞ்சென்ற கல்கெவல கெதர சந்ராவதி ஆகியோருக்கு சொந்த மான தெஹிவல, களு போவில, வைத்தியசாலை வீதி, இலக்கம் 205 எனும் முகவரியில் அமைந்துள்ள சுமார் 25 கோடி ரூபா பெறு மதியான 40 பேர்ச்சஸ் காணியே இவ்வாறு களு போவில போதனா மருத்து வமனைக்காக அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (உ)

# நாட்டைக் காத்தவர் மைத்திரி

"கடந்த அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்திருக்குமாயின் இலங்கைக்கு எதிராக இன்னும் பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டிருக்கலாம். தேயிலை ஏற்றுமதியைக் கூட நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே நாடு எதிர்கொள்ளவிருந்த பொருளாதாரத் தடையில் இருந்து நாட்டைக் காப்பாற்றினார். இப்போது ஐரோப்பா விதித்திருந்த இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டுள்ளது. ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை மீண்டும் கிடைத்துள்ளது. அத்துடன் போர்க் குற்ற நீதிமன்றத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது" என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ஆ)

# கை பேசி - ரயில் விபத்துக்களால் 20 பேர் உயிரிழப்பு



கைத்தொலைபேசி பாவனையினால் ரயில்களில் மோதி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ரயில்வே பாதுகாப்பு அத்தியட்சகர் அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார். இவ்வருடத்தில் 20 இளைஞர், யுவதிகள் இவ்வாறான விபத்துக்களினால் உயிரிழநதுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கரையோர ரயில் பாதையிலேயே அதிகளவானோர் விபத்துக்குள்ளாகி இருப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (உ)

# வீடிழந்தவர்களுக்கு துரிதகதியில் புதிய வீடுகள்

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதியின் கீழ் செயற்படும் நிறுவனமான தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஐந்து பில்லியன் ரூபா வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அனர்த்த நிலைமையினால் பூரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு வாடகை அடிப்படையில் வீடுகளை பெற்றுக்கொள்வதற்காக மாதாந்தம் 7500 ரூபாய் வீதம் மூன்று மாதங்களுக்கு நிதியுதவி வழங்க அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அதற்கான பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார். (உ)

# அணுகுண்டு வீசுவோம்

அமெரிக்கா - வட கொரியா பிரச்சினைக்கு முடிவு தெரியாமல் இருக்கும் நிலையில், 'நியூயோர்க் மீது அணு குண்டு போடுவது தங்களுக்கு சிரமமான காரியம் இல்லை' என்று வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது. அமெரிக்கா, கொரிய தீபகற்பத்துக்கு கடந்த சில வாரங்களாக அதிக ராணுவத் துருப்புகளை அனுப்பியிருந்தது. இந்த நிலையில், வட கொரிய அரசின் செய்தித்தாளான 'ரோடங் சின்மன்' 'ட்ரம்ப் இந்த ஆண்டு தொடக்கத்தில், வட கொரியா என்னதான் அணு ஆயுதச் சோதனை நடத்தினாலும், அணு குண்டை அமெரிக் காவுக்கு எதிராகப் பயன்படுத்தாது என்று அலட்சியமாகத் தெரிவித்துள்ளார். ஆனால், வட கொரியாவிலிருந்து நியூயோர்க் நகரத்துக்கு அணு ஆயுதம்மூலம் தாக் குதல் நடத்துவது ஒன்றும் சாத்தியமில்லாத காரியம் இல்லை.' என்று மிரட்டல் விடுக்கும் தொனியில் வடகொரியா செய்தி வெளியிட்டுள்ளது. (உ)



# லண்டனில் பயங்கரம்

## 27 மாடி கட்டடம் தீயில் எரிகிறது

மத்திய லண்டனின் லான் கேஸ்டர் வெஸ்ட் எஸ்டேட் பகுதியில் அமைந்துள்ள கிரென்ஃபெல் டவர் எனும் அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. கட்டடத்தின் இரண்டாவது மாடியில் பற்றிய தீ கட்டிடம் முழுவதும் பரவியதால் குடியி ருப்புவாசிகளில் பலர் கட்ட டத்தினுள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. 27 மாடி கொண்ட அடுக்குமாடி கட்ட டத்தின் தீ விபத்தில் காயமுற் றோருக்கு சிகிச்சைகள் வழங் கப்பட்டு வருவதாகவும், கட்ட டத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவ தாகவும் பிரிட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கட்டடத்தில் தீயை அணைக் கும் பணிகளில் 40 தீயணைப்பு வாகனங்கள், 200 இற்கும் அதிக மான தீயணைப்பு வீரர்கள் ஈடு பட்டுள்ளனர். தீ விபத்தில் சிக்கிய பலருக்கு சிகிச் சைகள் வழங்கப் பட்டு வரும் நிலையில் உயிரிழப்பு குறித்த தகவல்கள் இது வரை வெளி யாகியிருக்கவில்லை. (உ)

### பங்களாதேஷில் மழை, நிலச்சரிவு

# உயிரிழப்பு 130



பங்களாதேஷில் பெய்து வரும் கனமழையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக நிலச்சரிவும் ஏற்பட்டது. மழை, நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக உயர்ந்துள்ளது. அதிலும் இந்திய எல்லையில் அமைந்துள்ள தொலைதூர மலை மாவட்ட பகுதிகளில் வசித்து வந்த பலரும் உயிரிழந்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். நாட்டிலேயே அதிக சேதத்திற்குள்ளான ரங்கமாதி மாவட்டத்தில் மட்டும் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்க சென்ற இராணுவ வீரர்கள் நான்கு பேரும் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் நிலச்சரிவு ஏற்பட்டதால் பலர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது. இதில் பல குழந்தைகளும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# கென்யாவில் கட்டட விபத்து

## 15 பேர் மாயம்



கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியின் புறநகரில் நேற்று முன்தினம் இரவு 7 மாடி கட்டடம் ஒன்று திடீரென சரிந்து விழுந்தது. இதில் பலர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். மீட்பு படையினர் உடனடியாக விரைந்து, மீட்பு பணிகளை தொடங்கினர். 100-க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர். இருப்பினும் 15 பேரை காணவில்லை. அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த கட்டடத்தில் ஏற்கனவே விரிசல் இருந்ததாகவும், அதன் காரணமாக அதில் இருந்தவர்களை வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டிருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. (உ)

### வீடியோவில் இருப்பது நான்தான்

# குரல் என்னுடையதல்ல



ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, இரண்டாக அ.தி. மு.க. பிளவுபட்டு நின்ற நேரத்தில், சசிகலாவை ஆதரிப்பதற்காக அ.தி. மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு பணம்கொடுக்கப்பட்டதாக, மதுரை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ சரவணன் கூறிய வீடியோ காட்சி நேற்றுமுன்தினம் 'டைம்ஸ் நவ்' ஆங்கில தொலைக் காட்சியில் வெளியாகி பர பரப்பை ஏற்படுத்தியது. அதற்கு மறுப்பு தெரிவித் திருந்த எம்.எல்.ஏ சரவ ணன் வீடியோ படத்தில் இருப்பது நான் தான். அது பழைய வீடியோ. நான் பங்கேற்ற ஏதோ ஒரு நிகழ்ச்சி. எதுவென்று ஞாபகம் இல்லை. பழைய நிகழ்ச்சி. அதில் இருப்பது என்னுடைய குரல் கிடை யாது. மிமிக்ரி, டப்பிங் செய்து, போலியாக வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் சட்ட வல்லுநர்களுடன் ஆலோ சனை நடத்திக் கொண்டி ருக்கிறோம். கண்டிப்பாக இதுகுறித்து கிரிமினல் வழக்கு தொடர இருக்கி றோம் என்றார் அவர். (உ)

### மாற்றுத்திறன் வீரர்களுக்கு கரவெட்டியில் வாய்ப்பு

மாற்றுதிறனாளிகளை ஊக்குவித்து அவர்க ளின் விளையாட்டு திறமைகளை வெளிக் கொண்டு வரும் முகமாக உயிரிழை நிறு வனம் சமூக சேவைத்திணைக்களத்துடன் இணைந்து விளையாட்டு நிகழ்வினை நடத்த திட்டமிட்டுள்ளது. கரவெட்டி பிரதேச செய லர் பிரிவைச்சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் உடனடியாக கரவெட்டி சமூக சேவைப் பிரிவை தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் க.சிறிமோகன் கேட்டுள்ளார்.(இ-11)

### ஒன்றாக மரணிக்க ஆசைப்பட்ட

# தம்பதிக்கு நேர்ந்த சோகம்

பீகார் மாநிலம் சமஸ்டிபூர் மாவட்டம் பிர்சிங்பூர் கிராமத்தை சேர்ந்தவர் சங்கர் ராய். அவர் தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, அவரை ஒரு விஷ ப்பாம்பு கடித்து விட்டது. திடுக்கிட்டு எழுந்த அவர், தன்னை விஷப்பாம்பு கடித்ததையும், தன்னால் உயிர் பிழைக்க முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டார். தன் மனைவி அமிரி தேவி மீது உயிரையே வைத்திருந்த அவர், மரணத்திலும் மனைவியை விட்டு பிரியக்கூடாது என்று முடிவு எடுத்தார். அதனால், மனைவியிடம் சென்று விஷ யத்தை சொல்லிவிட்டு, 'உன்னைப் பெரிதும் நேசிக்கிறேன். உன்னுடன் சேர்ந்து சாக விரும்புகிறேன்' என்று கூறி, மனைவியின் கை மணிக்கட்டை, விஷம் ஏறிய தனது பல்லால் கடித்தார். மனைவியும் அதற்கு மகிழ்ச்சியுடன் உடன்பட்டார். அடுத்த சில நிமிடங்களில், இருவரும் மயங்கி விழுந்தனர். பக்கத்து வீட்டுக்காரர்கள், இருவரையும் உள்ளூர் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சங்கர் ராய் உயிரிழந்தார். அவருடைய மனைவி அமிரி தேவியின் உயிரை டாக்டர்கள் காப்பாற்றினர். அவர் நலமுடன் இருப்பதாக அவர்கள் கூறினர். இதனால், மனைவியுடன் சேர்ந்து சாக வேண்டும் என்ற கணவரின் இறுதி ஆசை நிராசை ஆனதுதான் பரிதாபம். (உ)



# தம்பியின் இழப்பால் அண்ணன் தற்கொலை

## மட்டக்களப்பில் பரிதாபம்



" தம்பி இறந்த சோகத்தில் அண்ணனும் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக தெய்வேந்திரன் லோகிதன் (வயது-23) என் பவர் உயிரிழந்தார். இவரது மரணச் செய் தியை அறிந்த அண்ணனான தெய்வேந்திரன் மோகனதரன் (வயது 28 ) " தம்பி இல்லாத உலகத்தில் நான் வாழ மாட்டேன்" எனக் கூறிக் கொண்டு கயிற்றை எடுத்துக் கொண்டு ஓடினார். உறவினர்கள் அவரை தடுக்க பின் னால் சென்ற போதும், அதையும் மீறி அய லில் உள்ள நாவல் மரத்தில் தூக்கில் தொங்கினார். உடனடியாக அவர் மீட் கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார். (இ)




# சதத்தில் சதம்!

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்ககாரா முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் 100 சதங்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.

சங்ககாரா கடந்த 2015-ம் ஆண்டு சர்வதேச டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனாலும், அவர் தொடர்ந்து முதல்தரக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே அவர் இங்கிலாந்தின் சர்ரே அணி சார்பில் நேற்று விளையாடிய போட்டியில் 121 ஓட்டங்களை விளாசி, 100ஆவது சதமடித்து சாதனை புரிந்துள்ளார்.

கிரிக்கெட் வரலாற்றில் 100 சதங்கள் அடிக்கும் 37 ஆவது நபர் சங்ககார என்பது குறிப்பிடத்தக்கது.(இ)

# 60 க்கு 20 தேவையா?



“ஒரு 20 வயது நடிகையை 60 வயது ஹீரோவுக்கு ஜோடியாக நடிக்க வைக்கிறார்கள். அதே சமயத்தில் 50 வயது நடிகையை 60 வயது நடிகருக்கு அம்மாவாக நடிக்கச் சொல்கிறார்கள். இது எந்தவகையில் நியாயமானது” என மலையாளத்தில் வளர்ந்து வரும் நடிகையான ரீமா கல்லிங்கல் கேள்வி எழுப்பியுள்ளார். சில நடிகர்களுக்கு ஜோடியாக நடிப்பதற்கு தங்கள் மகளை விட குறைந்த வயதுடைய பெண்கள் தேவைப்படுகிறார்கள் என ஆவேசமாகத் தெரிவித்த அவர்,

“நடிகர்களுக்கு கிடைக்கும் சம்பளம், புகழ், மரியாதை ஆகியவை நடிகைகளுக்கு மிகக்குறைவாகவே கிடைக்கிறது. மலையாளம் மட்டும் அல்ல மற்ற மொழி திரை உலகிலும் 60 வயது நடிகர்களுக்கு 20 வயது நடிகைகளைத்தான் ஜோடி யாக்குகிறார்கள்” என்றும் தெரிவித்தார்.

## அப்பிளை முந்தியது ஹூவாய்

கடந்த 2016ம் ஆண்டில் அப்பிள் போன்களின் விற்பனையை ஹூவாய் நிறுவனம் முந்தியுள்ளதாக அந்த நிறுவனத்தின் தயாரிப்பு இயக்குனர் ஆலன் வாங் தெரிவித்துள்ளார்.

மேலும் சாம்சங் போன்களுக்கு அடுத்தபடியாக ஹூவாய் நிறுவத்தின் போன்களே விற்பனையாகி உள்ளதாகவும்,ஹூவாய் நிறுவனம் கடந்தாண்டு மட்டும் 13 கோடியே 90 லட்சம் ஸ்மார்ட்போன்களை 74 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளதகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ஆ)

# தி.மு.க கூண்டோடு வெளியேற்றம்



சட்டசபையை நடத்தவிடாது தொடர் அமளியில் ஈடுபட்டதால், தி.மு.க எம்.எல்.ஏக்கள் அனைவரும் கூண்டோடு வெளியேற றப்பட்டனர்.

இன்று கூடிய தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், 'ஓ.பி.எஸ் அணியில் இருக்கும் எம்எல்ஏ., சரவணன், கூவத்தூரில் பேரம் பேசப்பட்டதாக கூறிய சமீபத்திய வீடியோ' குறித்து கேள்வி எழுப் பினார். மேலும், இவ்விவகாரம் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி னார். ஆனால் சபாநாயகர் தனபால், இது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் விவாதிக்க முடியாது என மறுத்துவிட்டார்.

இதையடுத்து தி.மு.கவினர் தொடர் அமளியில் ஈடுபட்டனர். தொடர் அமளியில் தி.மு.க உறுப்பினர்கள் ஈடுபட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் தனபால் எச்சரிக்கைவிடுத்தார். தி.மு.கவினர் தொடர் அமளியில் ஈடுபட்டதால் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க உறுப்பினர்கள் பேரவையை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்களுடன் தி.மு.க கூட்டணி கட்சி எம்.எல். ஏக்களும் வெளியேற் றப்பட்டனர். (ஆ

# கோஹ்லியின் ஓவியம் 23 கோடிக்கு விற்பனை



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லியின் பத்து வருட ஐபிஎல் கிரிக்கெட் போட்டி பயணத்தை குறிக்கும் ஓவியம்.23.7 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளது

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி தனது பெயரில் தொண்டு நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

இந்த நிறுவனம் சார்பில் நேற்று விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அதில், ஷஷா ஜப்ரீ என்ற பிரபல ஓவியர் கோஹ்லியின் 10 வருட ஐபிஎல் பயணம் குறித்து வரைந்திருந்த ஓவியம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இந்த ஓவியத்தை பிரிட்டனில் வசிக்கும் இந்திய வர்த்தகரான பூனம் குப்தா என்பவர் வாங்கியுள்ளார். (இ)

# நடிகர்களுக்கு எதிரான பிடியாணை இரத்து



பத்திரிகையை அவதூறாகப் பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகாததால் நடிகர்கள் சூர்யா உள்பட 8 நடிகர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை இரத்துச் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு நீதிபதி எம்.வி. முரளிதரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது,

ஊட்டி நீதிமன்றில் உள்ள அவதூ று வழக்கை ரத்து செய்யக்கோரி மேல்நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனு கடந்த மார்ச் மாதம் விசாரணைக்கு வந்தபோது, வக்கீல்களும் ஆஜரா கவில்லை. மனுதாரர் களும் ஆஜராகவில்லை. அத னால், அவரது இடைக் கால மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட் டன. தீர்ப்புக்காக பிரதான வழக்கு ஜூலை 5ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப் பட்டது. அதேநேரம், ஊட்டி நீதிமன்றில் நிலுவையில் இருந்த வழக்கு விசாரணைக்கு, 2011ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் விதித்த தடையும் ரத்து செய்யப்பட் டுவிட்டது. தற்போது, பிரதான மனு தீர்ப்புக்காக வருகிற ஜூலை 5ஆந் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள் ளதால், அதுவரை, 8 நடிகர்கள் மீதான அவதூறு வழக்கை விசாரிக்க ஊட்டி நீதிமன்றுக்கு இடைக்கால தடை விதிக்கிறேன் இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# ஒளி கொடுத்த கமல்

லைற் இல்லாத கிரா மங்களுக்கு வெளிச்சம் கொடுக்க, ரசிகர்களுக்கு புது ஐடியா கொடுத்திருக் கிறார் கமல். நாட்டுநடப்புகளைப் பற்றி முன்னெப்போதும் இல் லாத அளவுக்கு அதிரடி 'ருவிட்' செய்துவருகிறார் கமல். தனது ரசிகர்களை யும் மக்களுக்கு நலம்பயக் கும் விஷயங்களைச் செய் யச் சொல்லியிருக்கிறார். அந்த வகையில் தன் நற் பணி இயக்கத்தின் அகில இந்தியப் பொறுப்பாளர் கோவை தங்கவேலு மூல மாக, பிளாஸ்டிக் போத் தல்களில் தண்ணீர் நிரப்பி, அதில் குறைந்த வாட்ஸ் பல்பை நுழைத்து, அதிகம் வெளிச்சம் தரும் 'சிம்ப்ளி சூப்பர்' டெக் னிக்கை, லைற் இல்லாமல் இருட்டில் மூழ்கியிருக்கும் கிராமங்க ளில் செயல்படுத் தும்படி நிர்வாகிகளுக்கு உத் தரவிட் டிருக்கிறார் கமல். பிலிப் பைன்ஸ் நாட்டில் கண்ட றியப்பட்ட இந்த தொழில் நுட்பம் சோலர் சிஸ்டத்தின் மூலம் செயற்படுத்த, தன் நற் பணி மன்ற நிர்வாகிகளை முடுக்கிவிட் டுள்ளார். (உ)

# உடனே கொழும்பு வந்து சேருங்கள்

## சு.க .வினருக்கு திடீர் அழைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் விசேட கூட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது. இதற்காக கொழும்பில் நாளை இரவுக்கு முன்னதாக வருமாறு இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திடீர்க் கூட்டத்துக்கான காரணம் என்னவென்று தெரியாமல் சுதந்திரக்கட்சியினர் குழம்பிப்போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஆ)

## பாதசாரிக் கடவையில் பலியான மூதாட்டி

களனி பஸ் நிலையத்துக்கு அருகில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோணவல பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது நிரம்பிய வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார். குறித்த வயோதிபப் பெண், பாதசாரி கடவையைக் கடக்க முற்பட்ட போது எதிரே வந்த வாகனம் மோதியதாலேயே அவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்துடன் தொடர்புடைய வாகனச் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ)

# இன்றைய கருத்தோவியம்




## ரம்புக்வெல மீது ஊழல் வழக்கு

நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. மகிந்த அரசில் ஊடக அமைச்சராக ரம்புக்வெல இருந்தபோது தனிப்பட்ட தொலைபேசிக் கட்டணமான , இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை அரச அச்சகக் கூட்டுத்தாபன நிதியிலிருந்து செலுத்தியிருந்தார். இது தொடர்பிலேயே வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதேவேளை, அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டாரவுக்கு எதிராகவும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு வழக்குத் தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மைத்திரிக்கு சூனியம்: மந்திரத்தகடு சிக்கியது!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சூனியம் செய்ததாக நம்பப்படும் செப்புத் தகடுகள் கெபிட்டிக்கொல்லாவ பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள கல்லறையில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் துமிந்த திஸாநாயக்கவின் சகோதரர் மூவர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் என்போருக்கு கேடு விளைவிக்கவே இவ்வாறு சூனியம் செய்ததாக நம்பப்படுகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடமத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஹேதுஹாமிகே நந்தசேன, வடமத்திய மாகாண அமைச்சர் சுசில் குணரத்ன, அவரது மகன் துசித குணரத்ன, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் துமிந்த திஸாநாயக்கவின் சகோதரர்களான கவின் திஸாநாயக்க, அமில் திஸாநாயக்க மற்றும் ரவிந்திர திஸாநாயக்க ஆகியோரின் பெயர்கள் 10 அடி நீளமான இந்தத் தகட்டில் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களின் உருவங்களும் அந்தத் தகட்டில் வரையப்பட்டுள்ளன. (ஆ)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பரிசில்கள் ஜூன் 21 இல்

கரவெட்டி முதியோர் பேரவையால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு மே 31 ஆம் திகதி தற்போதைய பேர வைத் தலைவர் சி.காசியன் செயலாளர் க.பாலன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்தச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் கரவெட்டி பிரதேச சமூக சேவை பிரிவில் வைத்து எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9மணிக்கு சமூக சேவை அதிகாரி வரத பாஸ்கரன் தலைமையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-11)

### பிற்போடப்பட்ட பரீட்சைகள்

## புதிய திகதிகள் அறிவிப்பு



அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகளை மீண்டும் நடத்துவதற்கான திகதிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 3 க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை ஜூலை மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு , 93953 பேர் விண்ணப்பித்துள்ளனர். அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 3 க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அத்துடன், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவிச் சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை ஜூலை மாதம் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)




# நானொரு தமிழ் ரீச்சர்

“நான் ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில், ஜனாதிபதி மாளிகையில், தமிழ் வகுப்புகளை நடத்தினேன். அதனூடாக அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்மொழியை அதிகளவில் கற்றுக்கொண்டனர்” என்று, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். காலி, மாபலகம என்னுமிடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஆ)

# கர்ப்பிணி மருமகளுக்கு சூடு வைத்த மாமியார்



கர்ப்பிணியான தனது மருமகளுக்கு நெருப்பில் காய்ச்சிய கம்பியால் சூடு வைத்து மாமியார் சித்திரவைக்குட்படுத்தி வந்த கொடூரம் வெளிவந்துள்ளது. இந்தச் சம்பவம் மலையகத்திலுள்ள பொகலந்தலாவை பெற்றோசா பீரிட்லேன்ட் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியைச் சேர்ந்த செல்வராஜ் என்ற இளைஞரை 2013 ஆம் ஆண்டு காதலித்துக் கரம் பிடித்தார் அதேபகுதியைச் சேர்ந்த விஜயகௌரி. ஆனால் இவர்களின் திருமணம் செல்வராஜின் தாயாருக்கு பிடிக்கவில்லை. அதனால் வீட்டில் இருக்கும் மருமகள் விஜயகௌரியை அவர் கொடுமைப்படுத்தத் தொடங்கினார். இந்தக் கொடுமையின் உச்சக்கட்டமாக நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் சூடும் வைத்துள்ளார். “என் மனைவியை கொடுமைப்படுத்த வேண்டாம்” என்று தடுக்கும் செல்வராஜையும் அவரது தாயார் கடுமையாகத் தாக்கியுள்ளார். கடந்த 4 வருடங்களுக்கு மேலாக தனக்கு நிகழ்ந்த கொடுமையை விஜயகௌரி வெளியில் சொல்லாமல் மறைத்து வந்துள்ளார். ஆனால் தான் இப்போது கர்ப்பிணியாக இருக்கும் போதும், தனது வலது கை, நெஞ்சிபகுதி,தலை, போன்ற பகுதிகளிலே மாமியார் சூடு வைத்ததை தாங்க முடியாமல், வைத்தியசாலை அதிகாரிகளிடம் தனக்கு நேர்ந்த கொடுமைகளைச் சொல்லி அழுதுள்ளார். இதன் பின்னர் , சம்பவம் பற்றி பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டு, மாமியார் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(அ-25)


**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com


## நாளை நாளும் கோளும்

15.06.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 01ஆம் நாள்

சஷ்டி பி.ப. 01.31 வரை | அவிட்டம் பி.ப. 02.25 வரை | சித்தயோகம் | கரிநாள்

இராகுகாலம் 01.23-02.53 | சுபநேரம் 07.23-08.53 | எமகண்டம் 05.53-07.23

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைதி | ஆர்வம் | உயர்வு | பாசம் | தனம் | வெற்றி | புகழ் | இலாபம் | முயற்சி | உழைப்பு | சுகம் | நம்பிக்கை |

எதிரொலி
Ethiroli



# ஒற்றையாட்சி, பௌத்தம், தேர்தல் சீர்திருத்தம் புதிய யாப்பில் இவற்றுக்கே முன்னுரிமை

புதிய அரசியல் யாப்பை வகுக்கும்போது பிரதான மூன்று விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர இளைஞர் முன்னிணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில் , ஒற்றை ஆட்சி நாடு என்ற எண்ணக்கரு இதில் முக்கிய இடம்பெறுவது அவசியமாகும். பௌத்த மதத்துக்கு முதன்மை ஸ்தானம் வழங்கி அதனை போசிப்பது அவசியமாகும். அதேபோல தற்சமயம் அமுலில் உள்ள தேர்தல் முறைமைக்கு மாற்றமாக கலப்புத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# வடக்கு மாகாணசபை சர்ச்சை: மைத்திரிக்கு ஆளுநர் அறிக்கை



வடக்கு மாகாண சபையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விசேட அறிக்கையொன்று கையளிக்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் பிரதிநிதி என்றவகையில் குறித்த அறிக்கையை வட மாகாண ஆளுநர் ரெஜினோல்குரே கொழும்புக்கு அனுப்பிவைப்பார் என்று கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மாகாண அமைச்சரவைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் சர்ச்சை உட்பட மேலும் பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்படவுள்ளன என்று தெரி விக்கப்படுகின்றது. (அ-25)

# தபால் சேவை முடக்கம் மாணவர்கள் பாதிப்பு


பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தபால் சேவை ஊழியர்கள் நாடு தழுவிய ரீதியில் இன்று இரண்டாவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் நாடு முழுவதும் உள்ள 653 தபால் நிலையங்களும் 3,410 உபதபால் நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கொழும்பு பிரதான தபால் நிலையத்தில் மாத்திரம் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான கடிதங்கள் தேக்கமடைந்துள்ளதுடன் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் அஞ்சல்கள் விமான நிலையத்தில் தேக்கமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விண்ணப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி நாளை என அறிவிக்கப்பட்டுள்ளதால், பரீட்சார்த்திகள் நெருக்கடிக்கு உள் ளாகியுள்ளனர். (ஆ)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 2003.06.14

விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது. இதில் 11 விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர்.

# பாலியல் பெண்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி - விநாயகபுரத்தில் வீடொன்றில் பாலியல் தொழில் புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான நான்கு பெண்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று இன்று உத்தரவிட்டது.

பொலிஸருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பெண்கள் மே 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். இவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் இன்று ஆஜர் செய்யப்பட்டனர். இதன்போதே நால்வருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. இவர்களின் இரத்தமாதிரிகள் சட்டவைத்திய பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக மன்றில் பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## தொடர்ச்சிகள்

### பிரிட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராலயத்திடம் கோரியுள்ளோம். அவர்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்று உறுதி செய்துள்ளோம்" என்றார் அவர்.(அ)

(ஸ்ரீ விபத்து விரிவான செய்தி உள்ளே)

### தமிழரசுக் கட்சியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்து முதலமைச்சர் இறுதித் தீர்மானம் தொடர்பில் உரையாற்ற முற்பட்டபோது தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அதற்கு கடும் எதிர்ப்பினை வெளியிட்டனர். இந்நிலையில் அவைத்தலைவர் முதலமைச்சரை உரையாற்ற அழைத்தார். இதனையடுத்து குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர் குருகுலராஜா மற்றும் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான சயந்தன், ஆனோல்ட், அஸ்மின், சுகிர்தன், அரியரட்ணம், பசுபதிப்பிள்ளை உள்ளிட்டோர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். அந்நிலையில் முதலமைச்சர் தனது உரையினை வாசித்தார். தமிழரசுக் கட்சியின் முடிவுக்கு மாறாக குற்றஞ்சாட்டப்பட்ட இரு அமைச்சர்களோடு ஏனைய இரு அமைச்சர்களையும் நீக்கும் தீர்மானத்தை முதல்வர் எடுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தமிழரசுக் கட்சியினர் வெளிநடப்புச் செய்ததாக தெரியவருகின்றது. (எ-01)

### ஐங்கரநேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை செய்துவிட்டனர் " என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் என்மீது கொண்டிருந்த நல்லபிப்பிராயம் காரணமாகவே, வடக்கு மாகாணசபைக்கான தேர்தலில் கணிசமான வாக்குகளைப் பெற்று என்னால் வெற்றி பெற முடிந்தது. வாக்குகளைப் பணம் மூலம் வாங்குவதற்கு நான் பணம் படைத்தவன் அல்ல. தேர்தல் காலத்தில் எனக்கு நானே ஒளிவட்டம் போட்டு, கிரீடம் சூட்டி மக்களை வசீகரிக்கும் விளம்பரங்களைச் செய்வதற்கு நான் ஊடகப் பலம் கொண்டவனும் அல்ல. என் வாழ்வுமுறையினூடாக, ஒரு ஆசிரியனாக நான் சிறுகச் சிறுகச் சம்பாதித்து வைத்த நற்பெயர்தான் எனது மூலதனம். ஆனால், எனது பெயருக்குக் களங்கம் கற்பித்து, எனது ஆளுமையைப் படுகொலை செய்து, அரசியல் அரங்கில் இருந்தும் பொதுவாழ்க்கையில் இருந்தும் என்னை அகற்றும் நோக்குடன் பொய்யான குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப்பட்டு வந்துள்ளன.

இந்த அறிக்கையில் நான் கையூட்டுப் பெற்றதாகவோ ஊழல் புரிந்ததாகவோ, நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகவோ விசாரணைக்குழுவினர் எங்கும் குறிப்பிடவில்லை.இந்த இழிசெயலில், எக்காலப்பகுதியிலும் நான் ஈடுபட்டதில்லை. வருங்காலத்தில் சோற்றுக்கு வழியின்றித் தவிக்கும் ஒரு நிலை வந்தாலும்கூட இவ்வீனச் செயலில் நான் ஈடுபடப்போவதில்லை. என்றார் அவர்.

### விஷக் காகிதத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புவியியல் புத்தகங்கள் விஷ இரசாயன காகிதத்தால் அச்சிடப்பட்டுள்ளன. அந்த விஷக் காகிதத்தில் அசற்றோபினோன், பென்சலிடிகயிட், பென்சயில் அற்ககோல், பென்சோபினோன் போன்ற இரசாயனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. காரணமாக மாணவர்களின் கண் பார்வைக்கு தீங்கேற்படுத்துவதோடு, உடல் நல ஆரோக்கியத்திலும் பாதிப்பு உண்டாகும். எனவே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றோம்.அத்துடன் விநியோகிக்கப்பட்டுள்ள புத்தகங்களை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

குறித்த பாடப்புத்தகத்தில் ஐந்து இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டதாகவும், இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான புத்தகங்கள் நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.(அ)

### எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்போது பதிலளித்து உரையாற்ற தமக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். அதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் சுமார் ஒருமணி நேரம் சபை ரணகளமானது. இந்நிலையில் அவைத் தலைவர் அனுமதி மறுத்ததனால் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக்க ஆகியோர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (எ-01)

### வடக்கு அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளணியினரோ அந்தந்த அமைச்சு தொடர்பான விடயங்களில் தலையிடக்கூடாதெனவும் முதலமைச்சர் கண்டிப்பாக கூறியுள்ளார். பதவி விலகப்போகும் மற்றும் கட்டாய விடுமுறையில் அனுப்பப்படும் நான்கு அமைச்சர்களின் பொறுப்புகளையும் இனிமேல் தானே கவனித்துக் கொள்ளப்போவதாகவும், அமைச்சின் செயலாளர்கள் தனக்கே பொறுப்புக் கூற வேண்டுமெனவும் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் அதிரடியாக அறிவித்துள்ளார்.

இதேவேளை நான்கு அமைச்சர்களையும் ஒரேயடியாக பதவி நீக்கம் செய்ய தமிழரசுக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் தன்னுடைய மதிநுட்பத்தால் நான்கு அமைச்சர்களையும் ஒரேயடியாகப் பதவியில் இருந்து வெளியேற்றாமல், கட்டம் கட்டமாக அவர்களின் பதவியை முதலமைச்சர் பறித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (அ-1)

### அமைச்சரவையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுப்பொறுப்புள்ள குற்றச்சாட்டுக்கள். எனவே அமைச்சரவைக்கும் அதில் பொறுப்புண்டு. எனது தன்னிலை விளக்கத்தை எழுத்து மூலமாக முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு கையளித்துள்ளதால் சபையில் விளக்கமளிக்க வேண்டிய அவசியம் இல்லை" எனவும் குறிப்பிட்டுள்ளார். (எ-01)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்
விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்
தொடர்புகளுக்கு : 021 300 4848

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.